அலகு 9

# தொழில் முனைவு மேம்பாடு
ENTREPRENEURSHIP DEVELOPMENT

23
அத்தியாயம்

## தொழில் முனைவுக்கான அடிப்படைக்கூறுகள்
ELEMENTS OF ENTREPRENEURSHIP

பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.

–குறள் 675

**பொருள் :** வேண்டிய பொருள், ஏற்றக்கருவி, தக்க காலம், மேற்கொண்ட தொழில், உரிய இடம் ஆகிய ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிச் செய்ய வேண்டும்.

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

- தொழில் முனைவின் கருத்து பொருள் மற்றும் இலக்கணம்
- தொழில் முனைவோரின் சிறப்பியல்பு
- தொழில் முனைவின் முக்கியத்துவம்
- தொழில் முனைவோர், அக செயல் முனைவோர் மற்றும் மேலாளர் – ஒப்பீடு
- மகளிர் தொழில் முனைவு வாய்ப்புகளும் சவால்களும்
- தொழில் முனைவோரின் பணிகள்
- தோற்றுவிப்பு பணிகள், மேலாண்பணிகள் மற்றும் வணிகப்பணிகள்b ஆகியவற்றை புரிந்துக் கொள்ள இயலும்.

### அத்தியாயம் சுருக்கம்


23.01 தொழில் முனைவு: பொருள், கருத்து மற்றும் இலக்கணம்
23.02 தொழில் முனைபவரின் சிறப்பியல்புகள்
23.03 தொழில் முனைவின் முக்கியத்துவம்
23.04 தொழில் முனைவோர், அக செயல் முனைவோர் மற்றும் மேலாளர் – ஒப்பீடு
23.05 மகளிர் தொழில் முனைவோர்கள்
23.06 தொழில் முனைவோரின் பணிகள்


தொழில் முனைவு என்ற சொல் ஒரு புதிய தொழில் வினையை மேற்கொள்வதைக் குறிக்கும். இச்சொல் ஊதியம் நாடி பணிசெய்வதைக் குறிக்காது. பெற்ற கல்வியை வைத்து தொழில் செய்வது தொழில் முனைவு என்பதிலிருந்து வேறுபட்டது. தொழில் முனைவு என்பது ஒரு அமைப்பை தோற்றுவிப்பதில் முடியும் செயலை குறிக்கிறது

